# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு
(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


**யாழ். மேற்றிராசன மறைக்கல்விப் பரீட்சை —1970**

எதிர்வரும் 19-11-70 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு 4ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம் வகுப்புகளுக்கான மறைக்கல்விப் பரீட்சை அவ்வப் பாடசாலைகளில் நடந்தேறும்

ஜி. ரி. பாலசுந்தரம், O. M. I.
மறைக்கல்வி மேற்பார்வையாளர்.


95-ம் புத். | 1970-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 14-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 43-ம் இல


## விசேஷ அறிவித்தல்

### பரி. தந்தையின் இலங்கைத் தரிசிப்பு

பரி. தந்தை எதிர்வரும் மார்கழிமாதம் 4-ந் தேதி மாலை இலங்கையைத் தரிசிக்கும்போது அவரைக் கட்டுநாயக விமானநிலையத்தில் வரவேற்க யாழ்ப்பாண மேற்றிராசனத்திலிருந்து பயணம்செய்ய விரும்புவோரின் வசதிக்காக, யாழ்ப்பாணத்திலிருந்தும், மன்னாரிலிருந்தும் விசேஷ புகையிரதங்கள் ஒழுங்குசெய்ய ஆலோசனைகள் நடக்கின்றன. பிரயாணஞ்செய்ய விரும்புவோர் தாமதமின்றித் தங்கள் பங்குக் குரவர்களுடன் தொடர்புகொள்ள வேண்டும். மறு விபரங்களைப் பங்குக் குரவர்களிடமிருந்து தெரிந்து கொள்ளலாம்.

யாழ். மேற்றிராணியார்

## கத்தோலிக்க - அங்கிளிக்கன் ஒற்றுமையை பரி. தந்தை காண்கிறார்

சென்ற மாதம் 25-ம் திகதி சம்பேதுருமா தேவாலயத்தில் 40 ஆங்கிலேய-வேல்ஸ் வேதசாட்சிகளுக்கு அர்ச்சியசிஷ்டபட்டம் அருளிய வைபவத்தில் பரிசுத்த தந்தை 6-வது சின்னப்பர் செய்தருளிய பிரசங்கத்தில் முன்னொருபோதும் குறிப்பாகச் சொல்லாத முறையில் கத்தோலிக்க அங்கிளிக்கன் சபைகள் ஒன்றிக்கும் காலத்தைக் குறிப்பிட்டுள்ளார். 400 வருட காலங்களுக்குமுன் தமது விசுவாசத்துக்காக வேதசாட்சிகள் சிந்திய இரத்தத்தின் பயனாக, அக்காலத்தில் திருச்சபையில் ஏற்பட்ட புண் மாறுங்காலம் வெகு தூரத்தில் இல்லை என்று திட்டவட்டமாக அவர் உரைத்தார். இருசபைகளும் ஒன்றிக்கும்போது அங்கிளிக்கன் சபையின் கௌரவத்துக்கும், பாரம்பரிய முறைகளுக்கும் சற்றேனும் குறைகள் ஏற்படாத முறையில் அவ்வொன்றிப்பு ஏற்படும் என்றும், அவ்வொன்றிப்பின் தன்மை தற்போது கத்தோலிக்க ரோமன் திருச்சபையுடன் கிழக்கு முறைத் திருச்சடங்குச் சபைகள் ஒன்றித்தியங்கும் முறையில் அமைந்திருக்குமென்றும் கூறியருளினார்.

## ஹொங்கோங்கில் சிலமணிநேரம் பாப்பரசர் தங்குவார்

அவுஸ்திரேலியாவிலிருந்து திரும்பி ரோமாபுரி செல்லும் வழியில் பரிசுத்த 6-வது சின்னப்ப பாப்பரசர் ஹொங்கோங் தீவிலும் சிலமணி நேரம் தங்கிச் செல்வாரென உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகாய விமானத் தளத்திலிருந்து ஆசனக் கோவிலுக்குப் பரிசுத்த தந்தை ஹெலிகொப்டர் மூலமாகக் கொண்டு செல்லப்படலாமெனவும் அச் செய்தி கூறுகின்றது.

## "சகல சிறுபான்மையினருடனும் நீதியாய் நடப்போம்"

பாக்கிஸ்தான்தேச ஐக்கிய கிறீஸ்தவசபை அண்மையில் நிறுவப்பட்டபோது அத்தேச ஜனாதிபதி யாஹ்யாகான் அவர்கள் அனுப்பியசெய்தியில் அத்தேசத்திலுள்ள எல்லாச் சிறுபான்மையினருடனும் பாக்கிஸ்தான் அரசாங்கம் நீதியுடனும் தயவு தாட்சணியத்துடனும் நடந்துகொள்ளும் என வாக்குறுதி அளித்துள்ளார், "சாதி மத, நிறவேற்றுமை யொன்றுமின்றி சகலருடனும் ஸ்லாமிய பிரசாதிபத்திய அரசாங்கம் நடந்துகொள்வதுமின்றி அவர்களுடன் உதாரகுணத்துடனும் நடந்துகொள்ளும்," என ஜனாதிபதி உறுதிஅளித்தார்.

## உயிர் பறிகொடுத்த இடத்தில் வேதசாட்சிகளுக்கு மகிமை

400வருடங்களுக்குமுன் தமது கத்தோலிக்க வேதவிசுவாசத்துக்காக இங்கிலாந்தில் பலர் தமது உயிரைப் பறிகொடுத்தனர். இவ்வேதசாட்சிகளுள் 40 பேருக்கு பரிசுத்த தந்தை சென்றமாதம் அர்ச்சியசிஷ்டபட்டம் அருளி மகிமைப்படுத்தி இன்றுள்ள கத்தோலிக்கரும் தமது வேதவிசுவாசத்தை இழப்பதிலும் இறக்கத் தயாராக இருக்க வேண்டுமென ஞாபகப்படுத்தியிருக்கிறார். இங்கிலாந்தின் பல இடங்களிலும் இப்புதிய அர்ச்சியசிஷ்டர்களுக்கும் மறுவேதசாட்சிகளுக்கும் மகிமை உண்டாக்கும் தன்மையில் பல கொண்டாட்டங்கள் நடைபெற்று வருகின்றன. சென்றவாரம், லண்டன் மாநகரில் சரித்திரத்தில் தூக்குமேடைக்குப் பெயர்பெற்ற லண்டன் "ரவர்" சமீபத்தில் பலமேற்றிராணிமார் கூட்டுப் பூசைஒப்புக்கொடுத்து விசுவாசிகளுக்கும் ஊக்கம் ஊட்டியது. அவ்வாறே இவ்வாரமும் யோர்க் மாகாணத்திலும் வேதசாட்சிகளின் கொலைக்களத்துக்குப் பெயர்பெற்ற நேவ்ஸ்மயர் எனுமிடத்திலும் யோர்க் மேற்றிராணியாராகிய வீலர் அடிகளாரின் தலைமையில் மாபெரும்கொண்டாட்டம் நடைபெற இருக்கிறது.

## பாப்பரசரின் கண்டனம்

தனது தேசத்தின் வறுமையை அகற்ற முடியாது விழிக்கும் பிறேசில்தேச அரசாங்கம் அதன் முறைகளைக் கண்டிக்கும் யாவரிலும் சீறிவிழுந்து அவர்கள்மேற் குற்றம்சாட்டுகின்றது; இவ்வாறு அதன் சீற்றத்துக்கு அண்மையில் இலக்காகியிருப்பது கத்தோலிக்க திருச்சபை அதிகாரிகளாம்; மேற்றிராணிமாரும், குருமாரும் அதன் வசைமாரிக்கு மாத்திரமல்ல, வதைக்கொடுமைக்கும் ஆளாகியிருக்கின்றனர், இதையறிந்திருக்கும் பரிசுத்த தந்தை பிறேசிலில்நடக்கும் வதைக்கொடுமைகளை மனதில் வைத்து சென்றவாரம் தேசங்கள் பல அநாகரிகமற்றவகையில் வதைக்கொடுமைகளைக் கையாண்டு வருவது வெட்கத்துக்குரியது என்றும், நீதிக்கு அப்பாற்பட்டதென்றும் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். பிறேசில் வதைக்கொடுமை சகிக்கமுடியாத நிலையில் இருப்பதை அங்கு தொண்டாற்றிவரும் குருமார் சபைகளின் தலைவர்கள் பரிசுத்த தந்தையின் கவனத்துக்கு அண்மையில் கொண்டுவந்தது நேயர்கள் அறிந்த விஷயமாகும்.

● லண்டன் நகர் பஸ்களிலே சலார் கொடாமல் தந்திரமாகப் பிரயாணம் செய்கிறவர்களாலே வருடந்தோறும் பதினாயிரம் பவுண் நஷ்டமேற்படுகிறது. அவ்விதம் பிரயாணஞ் செய்கிறவர்களைக் கண்டுபிடிக்கும் மாயக்கண் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுத் தற்போது பரிசீலனை செய்யப்படுகிறது. இதன் மூலம் சாரதிகள் சூட்சமாக அவர்களைக் கண்டுபிடித்து விடுவார்களாம்.

## பிறேசில்கருதினல் வேதப்பரப்புதல் சபையின் புதிய தலைவர்

1962ஆம் ஆண்டு தொடக்கமாக வேதப்பரப்புதல் சபையின் தலைவராகத் தொண்டு செய்துவந்த கருதினல் அகாகியானியன் 75ஆம் பராய நிறைவுடன் ஓய்வு பெற்றுக்கொண்டதால் அவரின் இடத்துக்கு பிறேசில் தேச கருதினல் ரொசி அடிகளார் நியமிக்கப்பட்டிருக்கிறார்; வத்திக்கானில் இத்தகைய பொறுப்புவாய்ந்த தொண்டுக்கு தென் அமெரிக்க தேசத்தைச் சேர்ந்த எவரும். இதன் முன் நியமிக்கப்படவில்லை.

## ஓய்வுபெற்றுக் கொள்கின்றார்

சென்ற 10 வருட காலமாகக் கருதினல் குழுவினரில் மிகப் பிரபல்யம் பெற்று விளங்கினவரில் ஒருவராகிய கருதினல் அகாகியானியன் சில தினங்களின்முன் தனது 75ஆம் பராயம் நிறைவு கண்டதுடன், சுகயீனம் காரணமாகத் தாம் வகித்துவந்த விசுவாசப் பரப்புதல் வேலையின் தலைமையிலிருந்து ஓய்வு பெற்றுக் கொண்டு விட்டார். இவ்வேலையின் பொறுப்பை 1962ஆம் ஆண்டு முதல் அவர் ஏற்று நடத்திவந்த காலந் தொடக்கமாகப் பல புது முறைகள் அனுசரிக்கப்பட்டு வந்தன. கருதினல் அகாகியானியன் ருஷியா தேசத்துப் பிரிவாகிய ஜோர்ஜியாவில் 1895ஆம் ஆண்டு பிறந்தவர். கத்தோலிக்க திருச்சபை துருக்கி தேசத்திலும், ருஷியா தேசத்திலும் எதிர்ப்பு அனுபவித்த காலங்களில் அப்பகுதிகளில் தொண்டு செய்து வந்து கீர்த்தி பெற்றவர். பின்பு, ஆர்மினிய கத்தோலிக்க பிரிவினரின் பிதாப்பிதாவாகத் தெரிவு செய்யப்பட்டு, 50வயதில் கருதினல் பட்டமும் பெற்று ரோமாபுரியில் பலகாலம் சீவித்து வருகிறார். உலகின் பல பாகங்களுக்கும் கருதினலவர்கள் விஜயம் செய்திருக்கின்றார். சில வருடங்களின்முன் இலங்கையையும் தரிசித்தவர்.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்"


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகில இலங்கை
# மறைக்கல்வி மகாநாடு

**எங்கே?** யாழ்ப்பாணம், சம்பத்திரிசியார் கல்லூரி மேன்மாடி மண்டபத்தில்:

**எப்போது?** 1970 டிசம்பர் 15-ம், 16-ம் நாட்களில்.

**ஏன்?** நமது பிள்ளைகளுக்கு — அவர்களின் மறைக்கல்வியூட்டும் பொறுப்பைப் பெற்றோராகிய நாமே ஏற்றுக்கொள்ள வேண்டிய காலம் வந்து விட்டது. இத் தலையாய கடனை நாம் எப்படி நிறைவேற்றலாம் என்பதனை ஆராய்வதற்காக.

**எப்படி?**

- அகில இலங்கையிலுமுள்ள தமிழ்க் கத்தோலிக்க விசாரணைப் பங்குகளிலிருந்து தாய்மார்களும், தகப்பன்மார்களும் பங்குக் குருவானவர் தலைமையில் வந்து கூடுவார்கள்.
- மறை ஆயர்களும் மறைக்கல்வி விற்பன்னர்களும் அனுபவமுள்ள பெற்றோர் பிரதிநிதிகளும், உரையாற்றுவார்கள்.
- மகா நாட்டு அவையினர் குழுக்களாகப் பிரிந்து குறித்த பொருள் சம்பந்தமான பிரச்சினைகளை ஆராய்வார்கள்.
- குழுக்களின் ஆய்வுகளை மகாசபை கூடிப் பரிசீலனைபண்ணி அறிஞர்களின் துணையுடன் முடிவுகளைச் செய்யும்.
- விசாரணைப் பங்குகளின் பிரதிநிதிகளுக்கு உறையுளும், உணவும் வழங்கப்படும்.
- நிகழ்ச்சிகள் அனைத்தும் தமிழில் நடைபெறும்.

**உரைகள்:**

1. "பிள்ளைகளுக்கு மறைக்கல்வி ஊட்டுவதில் பெற்றோரின் பொறுப்பு."
   மகாவந். வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை.
2. "பள்ளிக்குச் செல்லுமுன் பிள்ளைகளுக்கு மறைப்பயிற்சி அளித்தல்"
   திருமதி அன்ரோனியா சாமிநாதர், J. P., M. M. C.
3. "திருவருட் சாதனங்களைப் பெறுதற்குப் பிள்ளைகளை ஆயத்தப்படுத்துதல்."
   சங். சகோதரி றேஸ், F. M. M.
4. "இளைஞரின் பிரச்சினைகள்."
   திரு. L. M. யோசெவ், B. A

மகாநாட்டின் வெற்றிக்கு அனைவரது ஆதரவையும் வேண்டுகிறோம்.

மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.
5-10-70

G. T. பாலசுந்தரம், O. M.I.,
யாழ்ப்பாணம் மேற்றிராசன
மறைக்கல்விக் குழுத்தலைவர்.

---

✠

## 1-ம் வருட மரண ஞாபகம்

**திரு. பிறிட்டோ றேமண்ட் மோத்தா**
(முன்னைநாள் சம்பத்திரிசியார் கல்லூரி ஆசிரியர்)
**மறைவு: 16-11-69**

திரு. மோத்தாவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக நிகழும்கார்த்திகைமாதம் 16-ந் தேதி காலை 6-15 மணிக்கு யாழ்ப்பாண ஆசனக் கோவிலில் திக்கப் பாடற் பூசை ஒப்புக்கொடுக்கப்படும். இத்திருப்பலியில் இவரை அறிந்த யாவரும் பங்குபற்றி இவரின் ஆன்ம சாந்திக்காக மன்றாடும்படி தயவாக வேண்டுகின்றோம்.

உறவினர், நண்பர், மாணவர்.

---

### நன்றித்துதி

திருஇருதயநாதரின் இரக்கத்தாலும், பரி. சதாசகாயமாதா, புனித யூதாததேயு இவர்களின் வேண்டுதலாலும் நான் கேட்ட காரியம் அனுகூலமானது. இன்னும் நான்கேட்கும் காரியங்கள் அனுகூலமாகும்படி இவர்களை இரந்து, நன்றிசெலுத்துகிறேன்.

ஓர் அடியாள்.

---

● அத்திலாந்திக் சமுத்திரத்தை அதிகம் குறுகியபாதை வழியாகக் கடந்து ஐரோப்பா போய்ச்சேர்ந்து முன்னில்லாத ஒரு பெரும் சாதனையை நிலைநாட்டுமாறு ஒரு பலூனிலே அமெரிக்காவிலிருந்து புறப்பட்ட ஆடவர்களுக்கும் பெண்மணி ஒருவருமாக மூவர் இடைவழியிலே காணமற்போய்விட்டனர். இந்தக் குறுக்குப்பாதையின் நீளம் 4,800மைல். இவர்களைக் கென்னடி முனையிலிருந்து விமானங்கள் பறந்துசென்று தேடிவருகின்றன.

● அமெரிக்காவை முதன்முதலாகக் கண்டுபிடித்தவர்கள் ஆசியாக்காரரேயென்று லெனின்கிறாட் நகரிலுள்ள சோவியத் நிபுணர்கள் கருதுகிறார்கள். கி. மு. 1500 ஆண்டுகளுக்கு முன்னரே ஆசிய பூகோள வல்லுனர்கள் அமெரிக்காவென்று ஒரு கண்டம் இருப்பதைக் கண்டுபிடித்தனரென்று அவர்கள் கூறுகின்றார்கள். பண்டைக்கால திபேத்திய, இந்திய பூகோள சாஸ்திரங்களை ஆராய்ந்தே இவர்கள் அவ்விதம் கூறுகிறார்களாம்.

---

# பாடசாலைகளில் தண்டனை அளிக்கலாமா?

(சென்றவாரத் தொடர்ச்சி)

தண்டனைகளின் இயல்பை ஆராய்தல் முக்கியமாகும். பிரம்பை ஏன் பகிஸ்கரிக்க வேண்டும்? அதை உபயோகிக்கும்போது உடலை வருத்துவிக்கும் என்பதற்காகவா? பிரம்பு மனிதனை இழிவு செய்கின்றது. சரீரத்தண்டனை யல்லாத எத்தனையோ தண்டனைகள் இவ்வாறு இழிவுசெய்கின்றன.

ஒரு மாணவன் வீட்டுவேலையாகக் கொடுக்கப்பட்ட தன் வேலையைக் கண்விழித்து எவ்வளவோ முயற்சிசெய்து வகுப்பிற்குக் கொண்டுவருகிறான். அவனது குறிப்புப் புத்தகத்தைப் பார்வையிடும் ஆசிரியர் மாணவர்கள் முன்னிலையில் அவனது எழுத்து அழகற்றது என்று கூறுவதோடு அமையாது வகுப்பின் முன்னிலையிலே கிழித்துவிடுவாரானால் மாணவனின் உள்ளம் எவ்வளவு பாடுபடும். சரீரத் தண்டனையிலு மித்தண்டனை கொடுமையானது. தற்காலத்தில் மாணவர்களுக்குக் கொடுக்கவேண்டிய புள்ளிகளைக் குறைப்பது முதலியனவும் தண்டனையாகக் கையாளப்படுகிறது. இவ்வகையான தண்டனைகள் சரீரத்தண்டனைகளைப்போலவே இருக்கின்றன. இவற்றின் காரணமாக மாணவர்கள் வேண்டா வெறுப்பாக நடந்துகொள்வதுமுண்டு. சோம்பல், மற்றவர்களை வெறுக்குந்தன்மை முதலியன வளர்கின்றன. பிற்காலத்தில் சமூகத்திற்கும் உதவாதவர்களாகிறார்கள்.

கோபப்படும் ஆசிரியர்கள் பாடசாலைக்கும், மாணவர்களுக்கும் தீங்குசெய்கிறார்கள். ஊசி விழுந்தாலும் கேட்காத அமைதி வகுப்பில் நிலவுவது மாணவர்கள் ஒழுக்கமுடையவர்களாயிருக்கிறார்கள் என்பதைக் காட்டவில்லை. வகுப்புகளில் சில ஆசிரியர்கள் நுழைந்தால் ஒரு மாணவன் சப்தமிடுவான், இன்னொருவன் முறைமாறிக் கேள்வி கேட்பான். மற்றுமொருவன் முறைமாறி மறுமொழிசொல்வான். இப்படியான குழப்பமான முறை நிலவலாம். இவ்வகையான வகுப்பை நடாத்துவது, போதிப்பது எளிதல்ல. ஆகவே மாணவர்கள் உற்சாகமாகச் செயல்படுகிறார்கள். தலைமை ஆசிரியர் அத்தகைய ஆசிரியரைக் கண்டிக்கலாம். எனினும் மயான அமைதி சிறந்ததாகக் கருதப்படக்கூடாது. வகுப்பிலே அமைதியாக இருக்கும் மாணவர்கள் அமைதியாகவே வாழ்வர். சமுதாய நன்மைக்காகத் தம் வாயைத் திறக்கவேண்டிய நேரத்தில் மௌனிகளாகக் கோழைகளாக மாறிவிடுவார்கள். ஆகவே, இவ்வகை நிலையில் பள்ளிக்கூடங்கள் கோழைகளைப் பிறப்பிக்க உண்டாக்கப்படவில்லை.

சில பாடசாலைகளில் மாணவர்கள் கண்டிக்கப் படுகிறார்கள். அபராதம் பணமூலம் செலுத்தப்படலாம், எச்சரிக்[illegible] முதல் வகுப்பிற்குச் செல்லும் ஆசிரியருக்கு மாணவர்களைக் கவர்ந்துகொள்ளக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு. புன்னகை செய்தல், அமைதியாக மாணவர்களிடம் நடந்துகொள்ளுதல் முதலானவை சில உபாயங்களாம். சிலபாடசாலைகளில் உள்ள மாணவர்கள் புதிய ஆசிரியர்களைக் கண்டால் அவர் எத்தன்மையானவர் என்பதை அறியப் பல வழிவகைகளைக் கையாள்வார்கள். அத்தருணங்களில் உபாத்தியாயர் மாணவர்களை அன்போடு கட்டுப்படுத்தக் கூடியவராக இருக்க வேண்டும்.

எடுத்தவைகளுக் கெல்லாம் மாணவரைத் தண்டிக்கும் ஆசிரியர்கள், மாணவர்களால் வெறுக்கப்படுவதோடு, வகுப்பையும் சரிவர நடத்தமுடியாமல் இருப்பார்கள். எப்பொழுதும் வகுப்பிலே குறும்புசெய்யும் மாணவர்கள் ஆசிரியரின் கோபத்திற்கு உள்ளாகின்றார்கள். இது அம்மாணவர்களின் சமூக வாழ்க்கையையே பாதிப்பதாயமையும். மாணவர்களுள்சிலர் உபாத்திமாருக்குக் கோபம் ஊட்டி அவர்கள் நடந்துகொள்வதைப்பார்த்து உள்ளுக்குள்ளே சந்தோஷப்படுவர். அவர்களுக்கு அது வேடிக்கை விளையாட்டாக விருக்கும்.

நல்ல ஆசிரியர்கள் மிக அரிதாகவே மாணவர்களைத் தண்டிப்பார்கள். அவர்கள் தண்டிக்கும்போது விருப்பமில்லாமலேயே அதைச் செய்கிறார்கள் என்று மாணவர்கள் உணர்வர். அப்படிப்பட்ட ஆசிரியர்களை மாணவர்கள் மதிப்பார்கள். உபாத்தியாயர் கொடுக்கும் தண்டனைகள் பிள்ளைகளின் ஒழுக்கத்தைக் குறைப்பதில்லை. ஆசிரியர்கள் மாணவர்களது உறவு வளர்கிறது. குற்றம் இழைத்த மாணவன் ஆசிரியர்களை நேசிப்பான். சுருக்கமாகச்சொன்னால், ஆசிரியர்களும் சிக்கனத்தைக் கையாள வேண்டும்.

("ஸ்புட்னிக்" என்ற ரஷ்ய ஆங்கில புத்தகத்தில் வெளிவந்த ஒரு கட்டுரையின் தமிழாக்கம்)

மொழிபெயர்ப்பு:
"இரா. செழியன்"

---

### குழந்தைச் செல்வம்

வீட்டிலே குழந்தை ஒன்று தவழ்ந்து கொண்டிருக்குமானால் பத்து விருந்தினர் சாப்பிடுவதுபோலிருக்கும். அதன் காலின் சதங்கைச் சப்தம் தேவகானம். கோபவார்த்தையோ வீணை ஒலி.

— தாகூர்.

குழந்தை இளம் செடி போன்றது. மற்றவர்கள் வளர்ந்த மரம் போன்றவர்கள். இளம் செடியை வளர்க்கும மண், நீர், காற்று, ஒளி ஆகியவை உயிரற்றவை; என்றும் ஒரு நிலையாய் இருப்பவை. ஆனால், குழந்தை வளர்க்கும் பெற்றோரும மற்றோரும் உயிருள்ளவர்கள்; உணர்ச்சியுள்ளவர்கள். ஆகையால் இளம் செடிபோல குழந்தை இயற்கையாக வளரமுடிவதில்லை. வளர்ப்பவர்களின் உணர்ச்சிகளும் விருப்பு வெறுப்புக்களும் அறியாமையும், அறிவும் குழந்தையின் வாழ்வைப் பலவாறு மாற்றியமைக்கின்றன. — மு. வ.

---

# சம்பத்திரிசியார் கல்லூரி
## யாழ்ப்பாணம்

# பிரவேச விண்ணப்பம்—1971

1. பின்வரும் வகுப்புகளில் மாத்திரம் இடவசதியுண்டு.

| | |
|---|---|
| 1ஆம் வகுப்பு | (1-6-65—31-12-65) |
| 3ஆம் வகுப்பு | 31-12-62 |
| 4ஆம் வகுப்பு | 31-12-61 |
| 6ஆம் வகுப்பு | 31-12-59 |
| 9ஆம் வகுப்பு | 31-12-57 |
| 10ஆம் வகுப்பு | 31-12-56 |
| 11ஆம் வகுப்பு | 31-12-54. |

2. அனுமதிகோரும் மாணவன் வகுப்புக்குரிய குறிப்பிட்ட திகதிக்குப்பின் பிறந்தவனாக இருத்தல் வேண்டும்.
3. விண்ணப்பப்பத்திரங்கள் 27 – 11 – 70 க்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பம் செய்யும் பத்திரங்கள் கல்லூரிக் காரியாலயத்தில் பள்ளிக்கூட நாட்களில் காலை 9-15 இல் இருந்து 10-15 மட்டும் நேரே வந்து கேட்பவர்களுக்குக் கொடுக்கப்படும்.
4. பிரவேசப் பரீட்சைத் தினம்
   1-12-70 (3, 4, 6, 9, 10, 11 வகுப்புகள்.)

7-11-70

சுவாமி மதுரநாயகம்,
கல்லூரி அதிபர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அசீசிப் பிரான்சிஸ் அசீசியும் கள்வர்களும்

— ஜஸ்டஸ்பிள்ளை, F. B. M.

அசீசியின் அண்ணல் புனித பிரான்சிஸ்குவின் துறவற வாழ்வின் ஒரு சில ஆண்டுகளில் பல சீடர்கள் அவரைப் பின்பற்ற வந்து சேர்ந்தனர். அண்ணல் பிரான்சிஸ் இவர்களைப் பல அறிவுரைகளாலும், முன்மாதிரிகையாலும், நல்வழிப் படுத்தி வந்தார். இவரது அறிவுரைகளில் தேவ நேசமும், பிறர் நேசமும் முக்கிய இடத்தைப் பெற்றன. இப்போதனைகளின்படி அவரது சீடர்கள், தங்கள் வாழ்க்கையை மாற்றியமைக்க அயராது உழைத்து வந்தனர்.

அவர்கள் வாழ்ந்து வந்த அக்கிராமத்தில் கொள்ளை, களவுக்குப் பெயர் பெற்ற மூன்று பேரைக் கொண்ட ஒரு கொள்ளைக் கூட்டம் இருந்து வந்ததை அவ்வூரே அறிந்திருந்தது. இதை அங்கு சீவித்திருந்த துறவிகளும் அறிந்திருப்பர் என்பது வெள்ளிடைமலை. ஒருதினம், அக்கள்வர் கூட்டம் பல இடங்களிலும் முயற்சித்தும் ஒன்றும் கிடைக்காததால், துறவிகள் ஆச்சிரமத்தை நாடினர். துர்அதிர்ஷ்டவசமாக பிரான்சிஸ்கு அவ்வமயம் ஆச்சிரமத்தைவிட்டு வெளிச் சென்றிருந்தார். அத்தருணத்தில் வாயில் காப்போனாய் இருந்த சகோதரர் அங்கு வந்துள்ளவர்கள் யாரென்பதை அறிந்து, தன் வாய்ச் சாலத்தின் மூலம் மிரட்டி, அவர்களைப் பயமுறுத்தி, துரத்திவிட்டார்.

சில மணி நேரங்களின் பின் பிரான்சிஸ்கு, இரந்து பெற்றுக் கொண்ட உணவுகளோடு அங்கு வந்து சேர்ந்தார். இவ்விதம் வந்த பிரான்சிஸ்கு தனது களைப்பையும் பொருட்படுத்தாது, தனது ஞான மக்களுக்கு ஆகாரம் பரிமாற முனைந்தார். அத்தருணத்தில், வாயில் காப்பாளராகப் பணி புரிந்த சகோதரரும், அவ்விடம் வந்து, தான் அன்று புரிந்த வீரச் செயலை அங்குள்ளவர்களுக்கு மிகவும் பெருமையோடு எடுத்துக் கூறினார். இதைக் கேட்டுக் கொண்டிருந்த அண்ணல் பிரான்சிஸ் ஆத்திரம் அடைந்தவராய் அச்சகோதரரை நோக்கி, "நீர் இப்பொழுதே எழுந்து; நம்மை நாடி வந்த அந்தச் சகோதரர்களைத் தேடிச் சென்று, அவர்களுக்குப் போதியளவு போசன பானம் கொடுத்து, அவர்களை



உபசரித்து, அவர்களிடம் மன்னிப்பும் கேட்க வேண்டும்" என மிகவும் கடுமையாகக் கேட்டுக் கொண்டார். அந்தச் சகோதரர் உடனே எழுந்து, தேவையான உணவுப் பொருட்களை எடுத்துக் கொண்டு, அக்கள்வர்களைத் தேடிப் புறப்பட்டுப்போய், பல இடங்களிலும், சுற்றித் திரிந்து, கடைசியாக ஒரு காட்டுப் பிரதேசத்தில் அவர்களைக் கண்டு பிடித்து, தன் பிதா கட்டளையிட்டபடி அவர்களை உபசரித்து, அவர்களிடம், முன்பு கண்டித்துப் பேசியதற்கு மன்னிப்பையும் கேட்டுக் கொண்டார்.

இந்தத் துறவியின் செயலைக் கண்ணுற்ற அக்கள்வர்கள், இச்செயலின் மர்மம் புரியாதவர்களாய் ஒருவரை ஒருவர் விழித்துக் கொண்டிருக்க அத்துறவி, தங்கள் பிதா பிரான்சிஸ்குவைப் பற்றியும், அவரது செய்கைகளைப் பற்றியும் அவர்களுக்கு எடுத்துக் கூறினார். இவைகளைக் கவனமாய்க் கேட்டுணர்ந்த அக்கள்வர்கள், பிரான்சிஸ்குவை நேரில் பார்க்க வேண்டும் என்று மனம் கொண்டவர்களாய், அந்தத் துறவியோடு புறப்பட்டு ஆச்சிரமத்தை நாடினார்கள். அங்கு அவர்கள் பிரான்சிஸ்குவைக் கண்டு அவருடன் அளவளாவினர். அண்ணல் பிரான்சிஸ்கு அவர்களுக்கு இறைவனின் அன்பையும், இரக்கத்தையும் எடுத்துக் கூறியதோடு, அவர்கள் மக்களுக்குப் புரிந்த வந்த கொடுமைகளும், இடையூறுகளும் தவறானது என அவர்களுக்கு எடுத்துரைத்தார். இவரது அறிவுரை அக்கொடியவர்களின் கன்னெஞ்சங்களை உருக்கியது. அவர்கள் மனம் மாறித் தங்களது முன்னைய வாழ்க்கையை முற்றும் துறந்து அண்ணல் பிரான்சிஸ்குவின் அடைக்கலத்தில் புகலிடம் கண்டனர். இவர்களும் துறவிகளாகி, உத்தமர்களாய் உயிர் நீத்தார்கள் என அறியக் கிடக்கின்றது.

மேலே கூறப்பட்ட சம்பவத்தை, அதாவது பிரான்சிஸ் கள்வர்களோடு நடந்து கொண்ட விதத்தை உற்று நோக்குமிடத்து, அவர் உண்மையிலேயே கிறிஸ்துவின் போதனையாகிய "உனக்குத் தீமை செய்கிறவர்களுக்கு நன்மை செய்" என்பதனைச் சிறந்த முறையில் வாழ்ந்து காட்டியுள்ளார். தன் எதிராளியை— தனக்குத் துன்பம் செய்ய வந்தவனையே நேசித்தார். அண்ணல் பிரான்சிஸ் இவ்வுலக சிருட்டிகளை இறைவனுக்காகச் சிநேகிப்பதில் இன்பம் கண்டார். எல்லாச் சிருட்டிகளையும் அவர் தனது சகோதரர் எனக் கூறிக் கொள்வார். இவர் எவ்வளவு தூரம் தனது நேசத்தைச் சிருட்டிகளுக்குக் காட்டினாரெனில் கொடிய மிருகங்கள் முதலாய் அவரிடம் சிரந்தாழ்த்தின. ஐந்தறிவு படைத்த இச்சிருட்டிப்புக்களை இவ்வளவு அன்பாக நடத்தினாரெனில், தன் உடன் சகோதரராகிய மனிதர்களை எவ்வளவோ மேலாக நேசித்திருப்பார். இதற்குச் சான்று பகர மேற்கூறிய சம்பவம் போதுமானதாகும். ஆகவே, நாமும், நமது உடன் சகோதரரைக் கிறிஸ்துவுக்காக, நேசிப்போமானால், ஒருநாள் அண்ணல் அசீசியைப்போல் கடவுளின் மாட்சியில் முடிவில்லாப் பேரின்பம் காண்போம்.

## உண்மைப் பொக்கிஷம்

ஜிம்என்னும் இளைஞன் கீழைத்தேசத்தில் இருந்து புதைந்துகிடக்கும் பொக்கிஷத்தைக் கண்டுபிடிக்கும் பொருட்டு அவியோனா நாட்டுக்கு வந்தான். தன்னுடன் குறிப்பிட்ட பொக்கிஷம் புதைத்து வைக்கப் பட்டதாகக் கருதப்பட்ட இடத்தின் புறஉருவப் படத்தையும் எடுத்துச் சென்றான்; அவன் வைத்திருந்த படம் உண்மையான படமல்லவென்று சிலர் கூறினர். ஆனால், அவனோ அதை நம்பாமல் ஒவ்வொரு முயற்சியையும் குறிப்பிட்ட இடத்தைக் கண்டுபிடிப்பதிலேயே செலவிட்டான். அவன் மிகப்பழைய தேவாலயங்களுக்கும், சரித்திரப் பிரசித்திபெற்ற நிறுவனங்களுக்கும் சென்று குறிப்பிட்ட பொக்கிஷத்தைப் புதைக்கப்பட்டிருந்த இடத்தின் தகவல்களைச் சேகரிக்கத் தொடங்கினான். இதனால் கத்தோலிக்க திருச்சபையைப்பற்றி நன்கு அறிந்துகொண்டான்.

அவனுடைய பையில்இருந்த பணமும் குறையவே அவன் வீணான இந்தப் புதையல் தேடுவதைக் கைவிட்டான்; பின்னர் அவன் ஒரு பெண்ணைச் சந்தித்து, மணந்து கொண்டான். அவள் ஓர் ஊக்கமுள்ள கத்தோலிக்க மாது: ஒரு வருடத்தினுள் ஜிம் உண்மையான பொக்கிஷமான கத்தோலிக்கத்தைக் கண்டு, ஞானஸ்நானமும் பெற்றான். — ரி. ஆர். மனோகரன்

(ஆதாரம்: கதலிக்ஸ் டையஸ்ட்)



வாழ்வதற்கு வலியழிந்து
வருந்தி மாயும் இதயமே!
மீள்வதற்குப் பாதை தந்து
மேலுயர்ந்த சிலுவை பார்.

தாங்கொணாத சுமை சுமந்து
தயங்கி நொந்த இதயமே!
ஏங்கியுள்ளம் வீழ்ந்திடாது
ஏந்துகின்ற சிலுவை பார்.

வளர்வதற்குக் கொம்பிலாது
வதங்கி வாடும் இதயமே!
தளர்வு நீங்கி விளைவுகாணத்
தாங்கும் அன்பின் சிலுவைபார்

உலக மாயக் கடலிலாழ்ந்து
உருக்குலைந்த இதயமே!
அலையடங்கும்; கரை கடந்த
அன்புபொங்கும் சிலுவைபார்.

ஒளியிழந்து இருள் கவிந்து
உயிரொடுங்கும் இதயமே!
வழியும் உண்மை வாழ்வுமீந்து
வாதைபோக்கும் சிலுவை பார்.

—[யாழ். ஜெயம்]—

# இறை அன்பின் இறை மக்கள்

"ஞானாகி"

கிறிஸ்துவின் மீட்பில் பங்குபெற்று அவருடன் அன்புறவு கொண்டு வாழும் மக்களின் சமூகத்தையே, நடந்தேறிய இரண்டாம் வத்திக்கான் சங்கம் "இறை மக்கள்" என அழகுபட அழைக்கின்றது. ஆகவே, அதன் கருத்திற்கிணங்க, இறை மக்கள் யார்? அவர்கள் எவ்வாறு தோன்றுகிறார்கள், உருவாகிறார்கள் என்று விவிலிய அடிப்படையில் ஆராய்வோம். இஸ்ராயேலரை இறைமக்களாக்கியது இறைவனது மீட்புத் திட்டமும், அன்பும், நன்மைத்தனமும், பராமரிப்புமேயாகும். அவர்களைத் தமக்கு நன்கு சேவை செய்யும் ஒரு மக்கட் குலமாக்க விரும்பினார் இறைவன். எனவே, பிதாப்பிதாக்கள் மூலம் அவர்களை வழிநடத்தி, அவர்களுடன் ஓர் உடன்படிக்கை செய்து, அவர்களைத் தம் மக்கள் ஆக்கினார். இதனாலேயே அவர்கள், "இறை மக்கள்" என அழைக்கப்பட்டனர். இந்த உடன்படிக்கையின் விளைவாக இறைவனுக்கும் இஸ்ராயேலருக்குமிடையே, புதிய உறவு உண்டானது. இனி இஸ்ராயேலர் இறைவனின் மக்கள். இறைவன் அவர்களின் கடவுள். இதனால் இறைவன் எப்போதும் அவர்களோடிருந்து, எவ்வித ஆபத்துக்களிலுமிருந்து அவர்களைப் பாதுகாத்து வந்தார். அவர்களது வாழ்வின் வழிகாட்டியாகப் பத்துக் கற்பனைகளைக் கொடுத்து, புதிய நாட்டையும் உடைமையாக்கினார். இவ்வாறு இறைவன் இஸ்ராயேலரைத் தெரிந்து கொண்டது, அவர்களது நலனுக்காக மட்டுமல்ல, அவர்கள் மூலம் ஏனையோரும் நன்மை பெறவேயாகும்.

இறைவனின் இத்திட்டம் புதிய ஏற்பாட்டில் பூரணமாய் நிறைவு பெறும். ஏனெனில், இஸ்ராயேலர் பிரமாணிக்கம் தவறி, கட்டளைகளைக் கைவிட்டுப் பிற தெய்வங்களை வழிபட்டார்கள். என்றாலும் இறைவன் தம் திட்டத்தைக் கைவிடவில்லை. புதிய உடன்படிக்கை மூலம் பின்வருமாறு அறிவித்தார். "இதோ நாட்கள் வரும்; அப்போது இஸ்ராயேலரின் வீட்டோடும் யூதாவின் வீட்டோடும் புதிய உடன்படிக்கை செய்வோம். நமது கற்பனையை அவர்கள் உள்ளத்திற் பதிப்போம். அவர்களுடைய இருதயங்களில் அதனை எழுதுவோம். நாம் அவர்களுக்குத் தேவனாயிருப்போம். அவர்கள் நமக்குப் பிரசைகளாக இருப்பார்கள். ஏனெனில், சிறு குழந்தை முதல், விருத்தாப்பியர்வரையிலும் எல்லாரும் நம்மை அறிவார்கள்" என்கிறார் கர்த்தர். இப்புதிய உடன்படிக்கையைக் கிறிஸ்து தம் குருதியில் நிறுவினார். அதனால் பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இறைவன் அவர்கள் உள்ளங்களில் வசித்துத் தூய ஆவியினால் அவர்களை நிழலிடச் செய்கிறார். எனவே, புதிய உடன்படிக்கையின் மக்களும் இறைமக்களாக விளங்க, அழைக்கப்பட்டுள்ளனர். கிறிஸ்துவின் குருதியால் நிறுவப்பட்ட இவர்கள் தூயஆவி, நீர் இவற்றால் மறுபிறப்புப் பெற்றுள்ளனர். திருமுழுக்கால் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஓர் உடலாய் இணைந்து, அவர் வழியாகத் தமதிரீத்துவ வாழ்விற் பங்கு பெறுகிறான். அது மட்டுமல்ல, இறைமகனாகின்றான். கிறிஸ்துவின் வாழ்வு, அன்பு, அதிகாரம் இவற்றில் உரிமை கொள்ளுகின்றான். ஆகவே, இனி அவன் அன்னியன் அல்ல; பரிசுத்த நகரத்தான். பரதேசியல்ல; இறைவனின் வீட்டான். நற்கருணை என்னும் அருட்சாதனம், கிறிஸ்துவின் மறையுடலுடன் ஒன்

[3ஆம்கலம் பார்க்கவும்]

றிக்கச் செய்கின்றது. "நீங்கள் போய் எல்லா இனத்தாரையும் சீடராக்குங்கள்" என்றார் எம்பெருமான் யேசு. ஏனெனில், சகலரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறியவும் வேண்டுமென்பது, அவர் விருப்பமும் சித்தமுமாகும். இந்த ஈடேற்றத் திட்டத்தைக் கொண்டுவரும் கருவியாக இயங்க வேண்டியோர் இப்புதிய இறைமக்களே. இவர்கள் உலகின் ஒளியாகவும், நிலத்தின் உப்பாகவும் இருந்து கிறிஸ்துவின் மூவித அலுவல்களாகிய குருத்துவ, அரச, இறைவாக்குரைக்கும் பணிகளில் பங்கு பெற்று, தமது அன்றாட வாழ்வில் செயலாற்றுவதே இவர்களின் தலையாய கடமை ஆகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சமூகத்தில் மதிப்புப்பெற்ற இதயருஜன் இறைவன் சமூகத்தில் கண்ணீர் நிறைந்த கிண்ணத்தைக் காணிக்கை வைத்தான்

இவ்வாறு சிலரின் வாழ்வு அமைந்து விடுகிறது. ஆயின் இதயருஜன் இப்புனித வாழ்வைப் பயன்படுத்தி, கிறீஸ்துவின் இரட்சிப்புப் பணியில் பங்குகொண்டான். "கிறீஸ்துவினது சிநேகம் மதுரமானது. அவரது சுமை இலகுவானது", என்பதை இதயருஜன் தனது வாழ்வில் சுவைத்து பலனுள்ளதாக்கிக் கொண்டான்.

## இதயருஜனின் குடும்பவரலாறும் இளமைப் பருவமும்.

செழிப்பான ஒரு சிறிய கிராமம். அங்கே பல குடும்பங்கள் சீரும் சிறப்புமாய் வாழ்ந்தன. அவ்வாறே இதயருஜனின் குடும்பமும், போதிய வருவாய் இல்லாதபோதிலும், யாவராலும் மதிக்கப் படத்தக்க சீரியவாழ்வு நடத்தி வந்தது. நான்கு புத்திரரும் ஒரு புத்திரியும் அக்குடும்பத்தின் செல்வங்களாக அமைந்தனர். இவர்களில் இரண்டாவது புத்திரன் தனது பண்பும் பயனுமுள்ள புனிதவாழ்க்கையால், இதயருஜன் என்ற பட்டப் பெயரை தனது பெற்றோரிடமிருந்து பெற்றுக் கொண்டான். இவனில் காணப்பட்ட குணப் பண்புகள், இவனது அன்னையின் செபதபத்தால் வந்ததென்றே கூறவேண்டும். இவனது அன்னை புரட்டஸ்தாந்த கிறீஸ்தவ குடும்பத்தைச் சேர்ந்தவளாய் இருந்தபோதிலும், கிறீஸ்துவைப் பற்றித் தான் அறிந்த அளவில், சுத்த உள்ளத்துடன், நேர்மையான வழியில் அவரை நேசித்தாள். அவளது செபச்சீவியம் அவளது குடும்பத்தை ஒளிபெறச் செய்தது. அவளது தேவசிநேகச்சீவியம், பிறர்சிநேகக் கிரிகைகளையும் புரியச்செய்தது. இதயருஜன் பிறப்பதற்கு முன்னமே, இருகுழந்தைகள் அவள் வயிற்றில் மோசம் போனபடியால், அவள் தனது நேர்த்தியின் படி இதயருஜன் பிறந்ததும், ஏழைகளுக்கு பெரும் விருந்திட்டாளாம். அத்துடன் வருடாவருடம் அவ்விருந்தைத் தொடர்ந்து நடத்தியும் வந்தாள். இவ்வித செப, தப, தான தருமம் செய்த தாயின் வயிற்றில் உருவான இதயருஜன் தன் தாயின் ஒவ்வோர் செயலையும் பின்பற்றினான். விசேஷமாக அவனது அன்னை செய்த செபம் அவனைக் கவர்ந்தது. இதயருஜனும் தனது தாயுடன் சேர்ந்து சிறுவயது தொடக்கமே செபத்தில் பங்குபற்றுவான். இவ்வாறு காலம் கடந்து போய்க்கொண்டிருக்கையில், அவன் எண்ணியிராத திடீர்ச்சம்பவம் அவனை அதிர்ச்சியுறச் செய்தது. அவனுக்கு எட்டுவயது நிரம்பா முன்னமே அவனுடைய அன்னை மரணமானாள். தாயை இழந்த இதயருஜனோ, தனிமையில் இருந்து அழுது, அழுது செபித்தானும் என்றால், அவனது செபப் பயிற்சி, தான் மிகவும் நேசித்த அன்னையின் அன்பு முழுவதையும் இறைவனில் செலுத்தி, அவரது சித்தத்திற்குப் பணிந்து, தனது கண்ணீர் நிறைந்த கிண்ணத்தை காணிக்கை வைப்பதில் திருப்தி கொண்டான். இதுவே இவன் முதன்முதல் தனது அன்பின் இரட்சகருக்கு வைத்த காணிக்கையாகும். இப்போது தாயற்ற பிள்ளைகள் ஐவரும் தந்தையின் கண்காணிப்பில் வாழத் தொடங்கினர். தாயை இழந்த சகோதரருக்கும், தந்தைக்கும் ஆறுதலளிப்பதில் இதயருஜன் மூழ்கிக்கொண்டான். மூத்த சகோதரன் செல்லப் பிள்ளைப் போக்குடையவனாகவும், சற்று மந்த குணம் படைத்தவனாகவும் இருந்தமையால், நமது இதயருஜனே வீட்டுப்பொறுப்பை ஏற்று நடத்தினான். தனது தந்தையின் அருகில் நின்று பணிபுரிந்து அவரது அன்பையும் கவர்ந்தான். அன்னையை இழந்த குழந்தைகளையும் தகப்பனையும் உற்றார் உறவினர் கருணைக் கண்கொண்டு நோக்கினர். இதயருஜனின் குணப் பண்பும், அவன் தனது குடும்பப்பொறுப்பை ஏற்று நடத்திய விதமும் யாவரையும் கவர்ந்தது.

## பாடசாலைச் சீவியம்:

இதயருஜனும் சகோதரரும் அருகில் உள்ள புரட்டஸ்தாந்த பாடசாலையில் கல்வி கற்று வந்தனர். ஒவ்வோர் ஆசிரியரும் தாயை இழந்த அச்சிறுருக்குப் போதிய ஆதரவு காட்டினர். ஆசிரியரின் ஆறுதலைப் பெற்ற சிறுரும் சற்று மனம் தேறி, தங்கள்கல்வியில் ஊக்கம் கொள்ளத் தொடங்கினர். இதயருஜன் படிப்பில் காட்டிய அக்கறையும், ஆசிரியருடனும், மாணவருடனும் பழகிய பண்பும், அவனை வகுப்பில் தலைமை இடத்தை வகிக்கச் செய்தது. படிப்பில் எப்படி முன்நின்றானோ, அப்படியே விளையாட்

— நாதன் —

டிலும் அவன் முன் நிற்பது வழக்கம். விளையாட்டில் மாத்திரம் அல்ல பிறர்க்கு உதவி செய்வதிலும் எப்போதும் மூழ்கிக் கொள்வான். அத்துடன் அவன் மறந்தும் பொய் சொல்லான். களவு என்பதைக் கனவிலும் நினையான். பொதுப்படக் கூறுகில் அவன் நேர்மையின் எடுத்துக் காட்டாக வாழ்ந்தான். அதனால் அவனது இதயத்தில் ஒருவித மகிழ்ச்சி, உற்சாகம் தைரியம் எப்போதும் இருந்துகொண்டே வந்தது. எவ்வித நற்செயலையும் துணிந்து செய்ய முன் நிற்பான். இவையெல்லாவற்றுக்கும் மூலகாரணம் அவனிடம் இருந்த தெய்வபக்தியே யாகும்.

## சிறுஒளியில் இருந்தவன் பூரண வெளிச்சத்தைக் கண்டடைந்தான்:

நம் இதயருஜனின் வாழ்வைப் பூரண கிறீஸ்தவ வாழ்வாக்க, பொதுநிலையினரின் அப்போஸ்தலனாக்க அவன் மூலம் பலரை மனம்திருப்ப இறைவன் சித்தங் கொண்டார். தெய்வாதீனமாக, இவன் தனது உயர்தரப்படிப்பை ஒரு கத்தோலிக்க கிறீஸ்துவகல்லூரியில் படித்துமுடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அங்கு பல இடங்களிலும் இருந்து, பலசமய மாணவரும் பங்குபற்றியிருந்தனர். இதயருஜனும், அவர்களில் ஒருவனைச் சேர்ந்து, தனது படிப்பை ஆரம்பித்தான். இவனது தேவபக்தியும், இன்சொல்லும், உற்சாகமும், மற்றவர்களைத் திருப்திப்படுத்தும் பண்பும், சிரேஷ்டர்கள் முதல், உடன் மாணவர் ஈறாக யாவரையும் கவர்ந்தது. யாவரும் அவனை ஒரே மனமாய் மதித்தனர் என்றால், அக்கலாசாலையில் உள்ள பொறுப்பான வேலைகள் எல்லாவற்றையும் இவனே தலைமை வகித்து நடத்திவந்தான். தனது படிப்பிலும் அவன் முதலிடம் வகித்தான். அவனது ஊக்கம் மன நிறைவு, நேர்மை, தைரியம் யாவும் சேர்ந்து, அவன் கையிட்ட கருமங்கள் யாவற்றிலும், வெற்றியை ஈட்டிக் கொடுத்தது. இக்கொடைகள் எல்லாம், யேசுநாதரின் அன்புச் செயல் என்பதை அவன் உணர்ந்து, தானும் அன்பின் தெய்வத்துக்கு நன்றிகூறி வந்தான். இப்படிப்பட்ட ஆன்மாக்களையே யேசுநாதரும் தமது அப்போஸ்தலிக்க சேவைக்குத் தெரிந்துகொள்ளுகிறார். ஆகவே இறைவன் இதயருஜனுக்கு கத்தோலிக்க கிறீஸ்தவ சமயத்தின் உண்மைவரலாற்றையும், புரட்டஸ்தாந்த சமயங்கள் இடைக்காலங்களில் தோன்றிய விதத்தையும் அறிந்துகொள்ளும் தருணம் கிடைக்கச் சித்தங் கொண்டார். கத்தோலிக்க சமயக் கல்லூரியாதலின் பல கத்தோலிக்க குருமார் அங்கு போதனு ஆசிரியராகக் கடமை ஆற்றினர். வாரத்தின் சில தினங்களில் சமய சம்பந்தமான விளக்கமும் கொடுக்கப்பட்டது. இதயருஜனுக்கு தனது கல்வியைவிட, யேசுநாதரைப்பற்றியும், அவரது ஒழுங்கான, உண்மையான போதனையைப்பற்றியும் அறிவதில் ஓரேஆவல். எனவே அவன் இத்தருணத்தை ஆதாயப்படுத்தி, கத்தோலிக்க கிறீஸ்தவ சமயப் போதனைகள் எவை? பிரிந்த கிறீஸ்தவ சபைகளின் போதனைகள் எவை? என்பதுபற்றி விளக்கமாக அறிந்துகொண்டான். கிறீஸ்துநாதர் போதித்தபடி, அவராலே தெரிந்துகொள்ளப்பட்ட அப்போஸ்தலர் வழியாக, அவரே தெரிந்து ஸ்தாபித்த தலைவரைப் பின்பற்றி, முறைமுறையாக ஒரே தலைவராகிய பாப்பரசரால், தூயஆவியானவரின் துணையுடன் நடத்தப்படும் திருச்சபை, கத்தோலிக்க திருச்சபை ஒன்று மாத்திரமே என்பதை அறிந்து கொண்டான். அத்தாய்த் திருச்சபையில் எங்கும் எப்பொழுதும் ஒரே போதகமே போதிக்கப்படுவதையும், கண்டு கொண்டான். அன்றியும், தேவநற்கருணையில் உண்மையாகவே யேசுநாதர் இருப்பதையும், அதை வசீகரிக்கும் குருமாரின் விரத்தத்துவ மகத்துவத்தையும், கத். கிறீஸ்தவர்கள் தேவநற்கருணைக்குச் செலுத்தும் அதிஉன்னத ஆராதனையையும் தெளிவாக அறிந்து, இதய அனபராம் யேசுநாதரை தான் உயிருடன் பெறும் நன்நாளை ஆவலுடன் காத்திருந்தான். தனதும், தன்னைச் சேர்ந்தவர்களதும், தற்போதய அரைகுறையான கிறீஸ்துவ வாழ்வுக்கு வருந்தியவன், திடங்கொண்டு தன் அன்புத் தெய்வத்திடம் தன்னை முழுதும் கையளித்து, கண்ணீர் நிறைந்த கிண்ணமாக காணிக்கை வைத்து தனது மனவிருப்பைப் பூரணப்படுத்த இடையறாது ஆவலுடன் செபித்து வந்தான். கிறீஸ்து ஸ்தாபித்த திருச்சபை இவ்வாறு பல பிரிவுகளாகி உலகில் ஒரு கிறீஸ்துவையல்ல, எத்தனையோ விதமான கிறீஸ்துவை அவரவர் மனம் போன போக்கின்படி ஆராதிப்பதும், கிறீஸ்துவை அறியாது அநேகர் இருப்பதும், அறிந்தும் பெருந்துரோகிகள் ஆவதும், அவன் கண்ணீர் சிந்தக் காரணமாய் இருந்தன. தனது மனவிருப்பை நிறைவேற்ற, தனது கல்லூரிப் படிப்பின் எல்லைவரை காத்திருக்க வேண்டி இருந்தது. இடைக்கால மதமாற்றம் தனது தந்தை, சகோதரருக்கு மனவெறுப்பை உண்டாக்கக் கூடும் என்று பயந்தான். தனது மதமாற்றம் தனக்கு மாத்திரமல்ல, தனது குடும்பத்தவர் உற்றார் உறவினர் யாவருக்கும் பெரும் உதவியாய் இருக்கவேண்டும் என்றும், யாவரும் உண்மை நெறியைக் கண்டறியவேண்டும் என்றும் இறைவனிடம், தனது படிப்பு முடிவுவரை செபஞ்செய்து வந்தான். பரீட்சையும் முடிவுற்றது. பரீட்சைப்பேறு வருவதற்கு முன்னதாகவே உத்தியோக பதவிகள் எல்லாம் காத்துக்கொண்டு இருந்தன. யாவரும் அவனைச்சுற்றி வளைத்தனர்.

## உத்தியோகமும் மதமாற்றமும்:

இதயருஜனோ இவைகள் ஒன்றிலும் ஈடுபடவில்லை. தான் அறிந்து கொண்ட உண்மை ஒளியை, தானும்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

## நான் ஒரு முட்டாள்!

(வாகரைவாணன்)

'நீ ஒரு முட்டாள்' என்று
நின்றஓர் இளைஞர்கூட்டம்
தீயென உமிழ்ந்தார் வார்த்தை
'தீவிர வாதத்தாலே
பூவுளம் கொண்டோர் கூடப்
புண்படப் பேசும்உன்றன்
நாவினை வெட்ட வேண்டும்
நாம்அதைச் செய்வோம்'என்றார்!

உண்மையைச் சொல்வ தாலே
உரைக்கிறீர் முட்டாளென்று!
'உண்மைகள்' கசக்கு மென்ற
உண்மையும் அறிவேன் நானும்!
வெண்மையைக் கருமை யென்று
விவாதங்கள் செய்யுமிந்த
மண்ணினில் 'உண்மை'க் கெங்கே
மனிதர்கள் மதிப்புத்தந்தார்?

உலகமே எதிர்த்த போதும்
உண்மையைச் சொல்லிவைப்பேன்!
கலகமே செய்த போதும்
கருத்தினை மாற்றமாட்டேன்!
விலகிஎன் வழியை விட்டு
வேறு வழிசெல்லென்று
மலையெனப் பொருள் தரினும்
மயங்கிநான் மாறமாட்டேன்!

உண்மைதான் தெய்வம் அய்யா
உணருவீர் இதனை நன்கு!
வெண்மைதான் இதனின் ரூபம்
விளக்கங்கள் தேவை யில்லை!
நன்மையே இதனின் நாட்டம்
நாளுக்கு நாள்மாறும்
தன்மையே இதற்கு இல்லை
தரத்தினில் குறையுமுண்டோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீருய்வு I "தொள்"

[முன்தொடர்ச்சி]

இருந்தாற்போலே கேட்கப்படும் ஒரு குரலொலி "Sir!" "அதாரது?" என வேலும் மயிலும் வினவும் பொழுது, முருகப்பா எழும்புகின்றனன். இவன் அரசியின் மைத்துனன்: அவளிலும் 3வயதுகூட, இவனுக்கு; உணவருந்துதலிற் பெரும் வீரன்; மிகபருப்பம். ஆனால் அதே வகுப்பு. இவனுக்கு, 35 பெயர்களில் 34-ம் இடம் அவ்வகுப்பில். முருகப்பா:

> **'கல்லாரேயாயினும்**
> **கற்றோரைச் சேர்ந்தொழுகின்**
> **நல்லறிவு நாளும் தலைப்**
> **படுவர்'**

எனத் திருவள்ளுவர் கூறினராம். அதற்கு இசைய, எனக்கும் புத்தி கூர்மையாயிற்று இன்று தினம். Sir, நீங்கள் எல்லீரும் என் மைத்துனி 'எவரையும் **இணைப்பவள்'** என்றீரே; "தொள், தொண்" என்றால் இணைத்தல் எனவும் கூறினீர். ஆனதினால் இவளைத் "தொண்டி," அன்றேல் "தொள்ளி," "தொள்ளை" என அழைப்போமா? வேலு... ஆசிரியர்: 'முருகப்பா, அங்ஙனமே நில், உட்காராதே. மூடத்தனமான வினா இது. மரியதாஸ், அலுமாரியிலிருக்கும் 'பதிணெண் கீழ்க்கணக்கு' எனுஞ் சிறு நூலை

### கலாநிதி : தாவீதடிகள்

உடனே கொண்டுவா, சிறு புஸ்தகம். ஆனால், அரசியின் மூளையைக்கடுப்ப, அறிவில் நிரம்பியது." "முருகப்பா, இதை வீட்டுக்குக் கொண்டு போ. அரசியின் பெற்றோரையும் கேள்: தேடு, நீ சொன்னதைத் திருவள்ளுவர் பாடியிருப்பின், உனக்கு 30ரூபா தருவேன். இல்லாவிடில் நீ இவ்வகுப்பு உல்லாசப் பிரயாணம போகும் பொழுது பணந்தர வேண்டும். ஏனையோர்க்கு கட்டுப்பணம் ரூபா 20; உனக்கு 30." "Sir, யான் சொல்லுவேன் யார் அங்ஙனம் பாடியதென." திரும்பவும் அரசி மேடையில் ஏறி, **நாலடியார்,** பக். 29. செய்யுள் 139இன் முதலிரு அடிகளையும் ஆசிரியர்க்குக் காட்டுகின்றனள். இதைக் குறித்து வியப்பின்று இப்பொழுது. ஏனெனில், அரசி திங்கள் மண்டலத்திற்குப் போய்த் திரும்பினள் என்று ஏனையோர் கூறினாலும், மறுப்பவர்இலர் அவ்வகுப்பின்கண். எல்லாரும் அதை நம்புவர். வேலு... ஆசிரியர்: "வினாசித்தம்பி, அந்தப் பெரிய அலுமாரியிலுள்ள சென்னை அகராதியின் 4-ம் பகுதியைக் கொண்டுவா இங்கு உடனே." அவர் அதின் 2091-ம் பக்கத்தை முருகப்பாவுக்கு காட்டி, அதை வாசிக்கும்படி கற்பிக்க, இவன் "தொண்டி4" = தேவடியாள்; "தொண்டி5" = களவுபோன பொருள், "தொண்டு1" = (4-ம் பொருள்) "ஒழுக்கங் கெட்டவள்" என வாசிக்கின்றான். 2103-ம் பக்கத்தில், அவர் காட்ட, இவன் 'தொள்ளி' = சேறு; 'தொளி1' = சேறு; 'தொள்ளை' = 'துளை,' 'குற்றம்' என வாசித்து முடிக்கின்றனன். அப்போது ஆசிரியர், புத்தமித்திரனை அழைப்பித்து, யாவர்க்கும் பின்வருமாறு இயம்பினர்: 'திராவிடம் விஞ்ஞான முறையாகத்தான் அமைக்கப்பெற்றது. ஆனால் முற்றும் புரியாத திராவிடம் தன்பிடரிக்குச் சேதமாய். இதின் உற்பத்திகள் பல. இவற்றை முழுவதூஉம் விளங்கவேண்டும். அங்ஙனமின்றாகில், கடவுளை மன்றாடுவதுபோற்றொடங்கி தேவதூஷணமாகவும் முடியக்கூடும். பாருங்கள்: இவன் அரசியை வாழ்த்த எண்ணி, அவளை நிந்தித்ததாக முடிந்ததே. **'தொள் இரண்டு'** உண்டு. 1-வது = தொடர்வுபடுத்துதல், இணைத்தல். 2-வது = துளைத்தல். இஃதிலிருந்து தொளைக்கப்பட்ட 'மரக்கலம்,' ஆங்கிலத்தில் Canoe = A boat made of the hollowed trunk of a tree, 'மரக்கால், துளை, குழி' எனுங் கருத்துகள் உண்டாகும். From the physical to the metaphysical, from the concrete to the abstract: சடப் பொருளிலிருந்து சித்துப் பொருளுக்குக் கருத்துகள் ஏறிவரும்; from the material to the moral' எனத் திரும்பவும் திரும்பவும் தாவீதடிகள் 'தமிழ்பண்பாடு' எனும் சஞ்சிகையில் போதித்தனரே 1964-ம் ஆண்டு தொடங்கி. குழி போன்றது உம் குற்றமாகில், அதுவும் 'தொள்ளை'யே. பேதுருப்பிள்ளை: "யாதைத் துளைப்பது உனக்கு எளிதாகும்?" என வினவுகின்றனர். பேதுருப்பிள்ளை "சேற்றை." "சரி." தொள்கு = சேறு; பள்ளமுமாம்; துளைத்தலின் விளைவு இதுவே.

—வளரும்

## மக்கள் சமூகத்தில் மதிப்புப்பெற்ற ......

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அடைந்து, பிறக்கும் அறியவைக்கக்கூடிய வசதியுள்ள உத்தியோகத்தைத் தெரிந்துகொண்டான். தனிதந்தைக்கும் சகோதரருக்கும் தாம் இருக்கும் தப்பறையான மார்க்கத்தைப்பற்றி, விளக்கம் கொடுத்தான். தந்தை நல்மனமாய் உத்தரவு கொடுத்தார். தந்தையும் மாணிக்கும்போது கத்தோலிக்க சமயத்தைத் தழுவியே மரித்தார் என்றால், நம இதயராஜனின் செப தபம் என்றே கூறவேண்டும். தகப்பனின் உத்தரவு பெற்ற இதயராஜன் கத். திருமறையில் சேர்ந்து தனது இதயதாகத்தைத் தீர்த்துக்கொண்டான். தான் இதுவரை அனுபவியாத இன்பத்தை தேவநற்கருணை பெற்றபோது அனுபவித்தான். கிறீஸ்து அரசர் திருநாள் அன்று, அவரைத் தனது இதய அன்பராகவும், தெய்வீக அரசராகவும் ஏற்றுக்கொண்டான்.

**இல்லற அந்தஸ்தைத் தெரிதல் :**

இப்படியான கிறீஸ்தவ பக்தனை, எவர்க்கும் இதமாய் நடக்கும் ஓர் பண்புள்ள வாலிபனை யார்தான் விரும்பமாட்டார்கள். கத்தோலிக்கர் ஓர் புறம், பிறசமயத்தவர் ஓர் புறம் அவனை விவாகம் செய்ய முன்வந்தனர். இதயராஜனோ, பணத்தைப் பார்த்தவனும் அல்ல, அழகை விரும்பினவனுமல்ல. தனது சமய அனுசரணைக்கு ஏற்ற, இதமான குணமுள்ள ஓர் பெண்ணைத் தனக்கு வாழ்க்கைத்துணைவியாக்கிக் கொண்டான். அவள் இந்து சமயத்திலிருந்து கிறீஸ்தசமயத்தில் மனந்திரும்பினவளானபடியால் சில பண்பாடுகள் அவளிடத்தில் குறைவாகவே காணப்பட்டன. எனினும் இதயராஜன் இறைவனால் தனக்குக் கிடைக்கப்பட்ட பெண்ணில் திருப்தி கொண்டவனாய், தனது முன்மாதிரியான சீவியத்தாலும் செபத்தாலும் குடும்பவாழ்க்கையை இனிதுறநடத்தி வந்தான். அவனுக்கு இறைவன் பல புத்திர இரத்தினங்களை கொடுக்கச் சித்தங்கொண்டார். சிறுவயது தொடக்கமே அச்சிறார் தெய்வபக்தியில் வளர்க்கப்பட்டனர். அத்துடன் அப்பிள்ளைகளுக்கு வேண்டிய கல்வியறிவும், மரியாதையான பழக்கவழக்கங்களும் மிகக் கவனத்துடன் ஊட்டப்பட்டது. காலம் இவ்வாறு கிறீஸ்தவனின் கடமையை உணர்த்தியவண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. இதயராஜனின், பாலப்பருவத்திலிருந்த பிள்ளைகள், காலஓட்டத்தின் விளைவால் வாலப்பரு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்


## மாக்குருஸ்-பூ வியாபாரி

❊ திருமண வைபவங்கள்
❊ ஆராதனை அலங்காரங்கள்
❊ கோயில் திருவிழாக்கள்

மற்றும் சிறப்பான வைபவங்களுக்குரிய மாலைகள், பூச்செண்டுகள் அனைத்திற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

### "மாக்குருஸ்"

சிறந்த மலர்கள், உயர்ந்த மரக்கறி வகைகள் நிறைந்த அளவில் என்றும் கிடைக்கும்.

19, லேடி மக்கலம் டிறைவ்,
நுவரெலியா.


# மறைக்கல்வி வரலாறும் நவீன மறைக்கல்வி மறுமலர்ச்சியும்

(S. A. I. மத்தியூ, S. S. J.)

மாற்றமே உலகின் இயற்கை என்றான் தத்துவஞானி. ஆம், நாம் மாற்றமுற்று வரும் உலகில் சீவிக்கின்றோம். குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து மக்களின் வாழ்க்கை முறைகளிலெல்லாம் பற்பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. விஞ்ஞானம் மனித வாழ்க்கையின் சகல அமிசங்களையும் பாதிக்கும அளவிற்கு முன்னேறியுள்ளது. வரலாற்றை வழுவின்றிப் பார்க்கும் எவரும இந்த உண்மைகளை நன்கு உணராமல் இருக்கமுடியாது. உளநூற் கல்வி இந்த நூற்றாண்டிலே மிகவும் முன்னேற்றம் கண்டுள்ளது. இந்த உளநூற் பின்னணியிலேதான் திருச்சபையும் தனது நவீன மறைக்கல்வி போதனைகளைப் புதிய முறையிலே போதிக்கிறது. திருச்சபையின் வரலாற்றிலே காலத்துக்குக் காலம் பற்பல இன்னல்களைச் சமாளிக்கவேண்டியிருந்தது. திருச்சபை என்ற அரணை அழிக்க அலை அலையாய் அதன் எதிரிகள் எழுந்தபோதும்; ஆராய்ச்சியின் பெயரால், சீர்திருத்தத்தின் பெயரால் இவ் வெதிரிகள் திருச்சபை என்ற அரணை இடமிருந்து இடித்தபோதும், வலமிருந்து வதைத்தபோதும் நிலைகுலையாமல் இருந்து வந்திருக்கிறது. காலத்துக்குக் காலம் ஏற்பட்ட இன்னல்களைத் துடைக்க கடுமையான நடவடிக்கைகளை எடுத்தது திருச்சபை. கடந்த நூற்றாண்டின் கடைசியில்—இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் தனது ஞானோபதேச போதனுமுறையில், தவறுண்டென அன்னைத் திருச்சபை கண்டாள். எனவே காலத்துக்கேற்ற மாற்றம் அவசியம் என திருச்சபையின் மறையியல் வல்லுனர்கள் உணர்ந்தனர்,

ஆனால் இன்றுகூட நம்மவரிலே சிலர் திருமறையிலே மாற்றம், போதனுமுறையிலே மாற்றம் பெரிய, சிறிய குறிப்பிடங்களைக் குப்பைத் தொட்டியில் போடுவதா என்று குமுறுகிறார்கள். இவர்கள் பழமை விரும்பிகள். பாரம்பரையாகப் படிப்பித்துவந்த மறைக்கல்வி அதற்கான முறைகள்—இவைகள் ஒவ்வாதனவாகிவிட்டனவா என்று இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலிருந்து உலகின் பலபாகங்களிலும் எதிர்ப்புக் குரல்கள் எதிரொலித்தன. ஆனால் பேதைமையால் பேதலிக்கும் இப் பெருமக்கள் திருச்சபைச் சரித்திரத்தின் ஆதிகால வரலாற்றை ஆராய்ந்துபார்க்குங்கால், தம் கருத்து தவறுடைத்து என்பதைச் சரியாக உணர்வார்கள்!

தற்காலம் நாகரீகத்தில் வளர்ச்சியடைந்து கொண்டு வருகிறது. மனிதன் சொல்லொணா நாகரீக உலகின் கருத்தாவாக மாறிவிட்டான். இந்நிலையில் மறைக்கல்வி போதிக்கும் முறையிலும் காலத்திற்கேற்ற மாற்றங்கள் ஏற்படவேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளவேண்டியதொன்று. ஓர் உறுப்பு உயிருள்ளதாக இருக்குமாயின் காலத்துக்குக்காலம் அதிலே மாற்றங்கள் காணப்படும், அப்படி மாற்றம் காணப்படவில்லையாயின் அது ஓர் உயிரற்ற பிண்டப்பொருளாகும், எனவே நம் மறையில் காலத்துக்குக்காலம் சில மாற்றங்கள் காணப்படுமாயின், நமது மறை உயிருள்ள மறை என்பதற்கு அதுவே சான்றாகும். அவ்வாறே ஞானக் கல்வி புகட்டுவதிலும் தற்காலக் குழந்தைகளின் மனோவளர்ச்சிக்கேற்ப, அவர்கள் வாழும் சூழலுக்கேற்ப ஞானோபதேசம் போதிக்கப்படல் வேண்டும்.

கடந்த அரை நூற்றாண்டு காலமாக புதிய ஞானோபதேச இயக்கம் வேரூன்றி வளர்வதற்கு அரும்பாடுபட்டுவந்திருக்கிறது, போதிக்கும் பொருளிலும் முறையிலும் உளசாஸ்திரப்படி மாற்றங்கள் தேவையென்று கணித்துவிட்டது ஞானோபதேச இயக்கம். ஆனால் நான் ஏற்கனவே கூறியபடி இந்த ஞானோபதேச முறையை நாம் ஆராய்ந்துபார்த்தால் நாம் ஒருவித மாற்றத்தையும் செய்யவில்லை என்பது புலனாகும். இந்த ஞானோபதேச இயக்கத்தை நாம் மறுமலர்ச்சி என்கிறோம். மறுமலர்ச்சி என்றால் திரும்பவும் மலர்ச்சி என்பதுதான் அதன் பொருள். எனவே ஆதியில் மலர்ச்சியாயிருந்த இந்த ஞானோபதேசமுறை இடையில் தளர்ச்சியடைந்து மீண்டும் மலர்ச்சியடைந்ததைத்தான் மறுமலர்ச்சி என்கிறோம். எனவே பழமை விரும்பிகள் பாரம்பரையை, பாரம்பரியத்தைப் பாதுகாப்பவர்கள் இந்த இயக்கத்தை எதிர்க்கக்கூடாது ஏற்றுக்கொள்ள வேண்டும் மனம்நிறைந்த மகிழ்ச்சியோடு. ஏனெனில் நாம் பழமையைய் பாதுகாக்கத்தான் விழைகிறோம். 7ஆம் நூற்றாண்டு தொடங்கி 19ஆம் நூற்றாண்டுவரை இருந்துவந்த முறைகளைக் கொழுத்தியெறிவது, அவர்கள் செயலிலே கரியைப் பூசுவது தற்கால ஞானோபதேச வல்லுனர்களின் நோக்கமல்ல என்பதை உணர்வார்களாக!

நமது இந்த புதியமுறை ஜேர்மன் நாட்டில் மியூனிச் என்ற நகரில் கண்டுபிடிக்கப்பட்டது. முதன்முதலாக இந்த நூற்றாண்டின் திருப்பத்தில், 1906ஆம் ஆண்டில் மியூனிச் நகரில் இது கண்டுபிடிக்கப்பட்டமையால் இதை மியூனிச் முறை என்கிறோம். ஜேர்மனிய ஞானோபதேசம் அல்லது உளநூல் ஞானோபதேசமுறை என்றழைக்கிறோம். இனி இதை இம்மட்டோடு நிறுத்தி ஆதியில் ஞானோபதேசம் எவ்வாறு போதிக்கப்பட்டது என்னும் வரலாற்றை ஆராய்ந்தபின் இந்த நவீன மறுமலர்ச்சியின் விளைவு—அதன் நோக்கம், செயல் யாது என ஆராய்வோம்.

—வளரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவழிபாட்டின் நாள்காட்டி

**கார்த்திகை — 1970**

| | | | |
|---|---|---|---|
| 15 | ஞாயிறு | வருட 33ஆம் ஞாயிறு | [ப] |
| 16 | திங்கள் | தினப்பூசை | [ப] |
| 17 | செவ்வாய் | ,, | [ப] |
| 18 | புதன் | ,, | [ப] |
| 19 | வியாழன் | புனித எலிசபேத் | [வெ] |
| 20 | வெள்ளி | தினப் பூசை | [ப] |
| 21 | சனி | தேவதாயின் காணிக்கை | [வெ] |

*சத்தியவேத பாதுகாவலன்*

# பரிசுத்த தந்தையின் வருகை

இலங்கைத் திருச்சபையின் சரித்திரத்தில் முன்னொருபோதும் நடந்திராத ஓர் அரிய நிகழ்ச்சி சமீபத்தில் நடந்தேறப் போகின்றது. மார்கழி மாதம் 4ஆம் தேதி பாப்பரசர் சில மணித்தியாலங்கள் வருகை தருவார் என்பது நிச்சயமாகிவிட்டது, எமது அன்பிற்குரிய தந்தையை நேர்முகமாகத் தரிசிக்கும் வாய்ப்பை எந்தக் கத்தோலிக்கனும் தன் வாழ்வின் அரிய பாக்கியமாகக் கருதுவான். சில வருடங்களுக்கு முன் அவர் பம்பாய் நகருக்கு விஜயம் செய்தபோது அவரைத் தரிசிப்பதற்காகவே இங்கிருந்து பலர் அங்கு சென்றதை நாமறிவோம்.

பாப்பரசர் திருச்சபையின் தலைவர் மட்டுமல்ல. வத்திக்கான் என்னும் சிறிய இராச்சியத்தின் தலைவருமாவார். விமான நிலையத்தில் அவர் அரசாங்க மரியாதைகளுடன் வரவேற்கப்படுவார். ஆனால், தமது வருகை அரசியற் சார்புள்ளதாய், அல்லது வெறும் வரவேற்பு உபசாரமாய் மட்டும் இராமல் ஆன்மீகத் தன்மை பொருந்தியதாய் இருக்க வேண்டுமென விரும்பிய அவர் விமான நிலையத்திலேயே திருப்பலிப்பூசை ஒப்புக் கொடுக்கத் தீர்மானித்தது எத்தகைய சிறந்த முடிவு. இத்திருச்சடங்கு அவர் எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு குரு— கத்தோலிக்கரின் தலைமைக் குரு— என்பதை அனைவருக்கும் எடுத்துக் காட்டும். அத்துடன் அவரது வரவேற்பு வைபவத்தில் அவரே பன்முறை வற்புறுத்தி வந்துள்ள எளிமையும், தூய்மையும் இடம் பெறுதல் விரும்பத்தக்கதாகும். பல்லாயிரம் மக்கள் கலந்து கொள்ளும் இவ்வைபவத்தில் பாப்பரசரின் அன்பர்கள் அவரைக் கண்குளிரக் கண்டு களிக்கப் போதிய வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும். பாப்பரசர் ஓர் உல்லாசப் பிரயாணி அல்லர். அவர் ஒரு யாத்திரீகர். இதற்கேற்ப அவருக்கு அளிக்கப்படும் வரவேற்பும் ஆன்மீகத் தன்மை பொருந்தியதாயிருக்கும் என எதிர்பார்க்கிறோம்.

ஆறும் சின்னப்பர் உலகிலுள்ள பல நாடுகளுக்கு விஜயம் செய்தவர். பல நாடுகளிலுமுள்ள திருச்சபையின் நிலைமையை அறிவதற்கு அவர் அந்நாடுகளுக்குச் செல்வது அவசியமில்லையாயினும் தாம் வழிநடத்தி வரும் மக்களை நேரில் கண்டு அவர்களோடு தம் அன்பைப் பரிமாறிக் கொள்ள இந்த யாத்திரைகள் அவருக்குத் துணைபுரிகின்றன. இலங்கையில் அவர் செலவிடும் சில மணி நேரம் பாப்பரசரையும் இலங்கையிலுள்ள அவரது மந்தைகளையும் இன்னும் நெருக்கமாகப் பிணைக்கும் ஒரு சக்தியாக விளங்கும் என எதிர்பார்ப்போம்.

# ஆன்மசுகமே மேலானது

போர்த்துக்கால் தேச ஒப்போட்டோ பிரிவு மேற்றிராணியாராகிய கோமஸ் அடிகளார் அண்மையில் விலடாறெஸ் குருமாணவர் கல்லூரியில் பலகிறீஸ்தவ பிரிவினர் அடங்கியிருந்த சபையினருக்குப் போதிக்கும்போது பத்திமாகிரி போன்ற புனித சேத்திரங்களில் கிறீஸ்தவர்கள் மாய வித்தைகள்போல மாற்றங்களை எதிர்பார்க்கப்படாதெனவும் தேகசுகத்திலும் பார்க்க ஆன்மசுகம் அடைவதே பெரிதெனும் மனப்பான்மை உடையவராயிருக்க வேண்டுமெனவும் வற்புறுத்தினர். கோமஸ் அடிகளார் உண்மையை வெளிப்படுத்துவதில் தயங்குபவர் அல்லர். சலசார் ஆட்சியின் போது போர்த்துக்கால் அரசாங்கத்தின் முறையைக் கண்டித்துப் பேசியதற்காக 10வருடகாலமாகத் தேசத்திலிருந்து வெளியேற்றப்பட்டவர்.

## செக்கோசிலாவாக்கியா வத்திக்கானின் உறவை நாடுகின்றதா?

சென்றவாரம் செக்கோசிலவாக்கிய சமயவிவகார உயர் உத்தியோகஸ்தர் திரு. கறல் குறிசா, வத்திக்கானுக்குச்சென்று வத்திக்கான் வெளிவிவகார காரியாலய கருதினால்களில் ஒருவராகிய கசரோலி அடிகளாரைத் தரிசித்து அத்தேசத்தில் குருமார், மேற்றிராணிமாரின் நியமனங்களைப்பற்றிக் கலந்து ஆலோசித்திருக்கிறார் என்று அவுஸ்திரிய தேச கத்தோலிக்க செய்திஸ்தாபனமாகிய "கத்பிறெஸ்" கூறுகின்றது. இந்த அடிப்படைப் பேச்சுகள் வத்திக்கானுக்கும், செக்கோசிலாவாக்கியாவுக்கும் நல்லுறவை ஏற்படுத்த வழிகோலக்கூடுமென்றும் அச்செய்திஸ்தாபனம் சுட்டிக்காட்டியிருக்கின்றது. இருவருடங்களுக்குமுன் திரு. டுபெக் அவர்கள் ஆட்சிப்பொறுப்பினராக இருந்த காலத்தில் வத்திக்கானுடன் செக்கோசிலாவாக்கியா நல்லுறவு ஏற்படுத்தும் நிலைமையிலிருந்ததையும், அதன்பின் இம்முயற்சிகள் ஊக்கப்படாதிருந்ததையும் நேயர்கள் அறிவர்.

மனிலாவில் பாப்பரசரால்

## 200 குருமார்

அபிஷேகஞ்செய்யப்படுவர்

பிலிப்பைன்தேச மனிலா நகரிலே நடக்க இருக்கும் ஆசியா பிராந்திய மேற்றிராணிமார் மகாநாட்டில் பங்குபெறுவதற்காகப் பரிசுத்ததந்தை இம்மாதம் 27ஆம் திகதி மனிலா நகரை அடைவார். அந்நகரில் மூன்று நாட்கள் தங்குவார். அங்கு நடைபெற இருக்கும் நிகழ்ச்சிகளில் பரிசுத்ததந்தையின் திருக்கரத்தினால் ஆசியகண்ட 15 தேசங்களைச் சேர்ந்த 200 குருமார் அபிஷேகம் செய்யப்படுவது பிரதானமானது. அவரது மனிலா நகர விஜயத்தின் முதல் நாளாகிய 27ஆம் திகதி அந்நகர ஆசனக்கோவிலில் திருப்பலி ஒப்புக் கொடுத்தபின் மேற்றிராணிமாரைச் சந்தித்து அவர்களுடைய மகாநாட்டில் கலந்துகொள்வார். பரி. தந்தை அங்கு தங்கியிருக்கும் நாட்களில் அம்மாநில அதிபர் ஜனாதிபதி மார்க்ஸ் அவர்களையும், மறுஅரசாங்கப் பிரமுகர்களையும், பிறசமயத் தலைவர்களையும் சந்தித்துத் தமது மரியாதையை அவர்களுக்குக் காண்பித்தருளுவார்.

## உரோமன் கத்தோலிக்க சமய விவகார ஆய்வுரைக் குழு

1970 ஆகஸ்ட் 26-ந் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்கு மேற்கூறிய குழுவில் கடமை புரியவெனப் பின்வருவோரை மாண்புமிகு கலாச்சார அலுவலக அமைச்சர் நியமித்திருக்கிறார்.

மேற்றிராணியார் ஒஸ்வால்ட் கோமிஸ் (தலைவர்).
அதிவண. டபிள்யூ. எல். ஏ டொன் பீற்றர்.
வண. பிதா டபிள்யூ. டொன் சில்வெஸ்ரா.
வண. பிதா ஹென்றி பொன்னையா.
வண. பிதா ஏணஸ்ட் போறுதொட்ட
வண. பிதா மைக்கல் லூஸோன
வண. பிதா என். எம். சவரிமுத்து.
சங். சகோதரன் திமத்தி கொலமுன்ன
சங். சகோதரி மேரி யோசெவ் (ஆர். ஜி. எஸ்).
சங். சகோதரி மேரி விட்வின, (ஏ. சி).
திரு. ஜீ. ஐ. ஓ. எம். குருகுலசூரிய
திரு. ஐ. வி. பேர்டினன்ஸ்.
திரு. லெஸிலி பர்னாந்து.
திரு. எவ். எக்ஸ். சி. நடராஜா.
திரு. ஜே. டீ. மத்தாயஸ், (கௌரவ செயலாளர்).

உரோமன் கத்தோலிக்க சமயம் சம்பந்தமான விவகாரங்கள் பற்றி கலாச்சார அலுவலக அதிபருக்கு ஆலோசனை கூறுவதே இக்குழுவின் நோக்கமாகும். இக்குழு பொரளையிலுள்ள அதிமேற்றிராணியார் இல்லத்தில் அண்மையில்குழுமி இலக்கியம் சம்பந்தமான ஒரு போட்டியை நடாத்தி, சிங்களத்திலும், தமிழிலும் 10சிறுகதைகளை எழுதுவோருக்குப் பரிசில்கள் வழங்குவதெனத் தீர்மானித்தது. இப்போட்டி சம்பந்தமான விபரங்கள் பத்திரிகைகள்மூலம் அறிவிக்கப்படும். ஒரு நாடகப்போட்டியை நடத்துவதற்கும் ஒழுங்குகள் செய்யப்பட்டு வருகின்றன. எவரேனும் இக்குழுவுக்கு இதைப்பற்றி எடுத்துரைக்க விரும்பினால், அவர்கள் தங்கள் கருத்துக்களை "கௌரவ செயலாளர், உ. க. ச. வி. ஆ. குழு, 53, எலி ஹவுஸ் வீதி, கொழும்பு 15" என்ற முகவரிக்கு அனுப்பலாம். தொலைபேசி இல. 35747.

## மக்கள் சமூகத்......

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

வத்தை அடையத் தொடங்கினர். இதயராஜன் விழிப்புடன் இருந்து, தன் மக்களுக்கு இல்லற அந்தஸ்து துறவற அந்தஸ்து என்பவற்றின் விளக்கம் கொடுக்க மறக்கவில்லை. அதன் பயனால் அவனது குலவிளக்குகள் போன்றிருந்த சிறாரில் சிலர் குருத்துவ அந்தஸ்தையும், சந்நியாச அந்தஸ்தையும் விரும்பினரென்றால், இதயராஜனின் மனத்திரும்புதல் உண்மையான ஓர் தேவ அழைப்பாகவே இருந்தது.

**வாழ்க்கையின் இறுதிக்காலமும் கண்ணீர்க் காணிக்கையும்:**

இதயராஜனின் புத்திரரில் ஒருவர் ஒளிவிளக்காக, மலையில் ஏற்றப்பட்ட தீபம்போல் குருத்துவ அந்தஸ்தைத் தெரிந்து கொண்டார். அப்படியே இல்லற அந்தஸ்தையும் வேறொருவர் தெரிந்துகொண்டார். ஆயின் மின்வேகத்தில் ஓடிக்கொண்டு இருக்கும் நவீன உலகு, இதயராஜனின் பிள்ளைகளையும், வாழ்க்கையின் நாகரீக ஓட்டத்தில் தடுமாற வையாமல விடவில்லை. ஆயின் இதயராஜனின் செபதபமும், கண்ணீர்க் காணிக்கையும் அத்தடைகளை, சிக்கல்களை இலகுவாக்கியது. நேரியபாதையில் ஓடவைத்தது. கடைசியில் தானும் இறுதிக்காலத்தை இறைபணிபுரிவதெனத் திட்டமிட்டான். இதுவரை அவனை வழிநடத்திய இறைவன் இவ்வாறு அழைக்கச் சித்தங்கொண்டார் போலும். இவ்விசேஷ அழைப்பைப் பெற்றவன் வெகு இலகுவாக இப்பணியைச்செய்துமுடித்துவிடலாமா? நம் இதயராஜனின் சகல ஆறுதலையும பெற்ற மனைவியே முதலில் அவனது இறைசேவையை எதிர்த்தாள், மக்களில்சிலரும் விளக்கக் குறைவாய் மனம் வருந்தினர். இதயராஜனோ இடையறாது தன்னை ஏவிக்கொண்டிருக்கும் அன்பின் தெய்வத்துக்குத் தன்னைக் கையளித்தான். தனது ஒய்வு நேரங்களில் இறைபணிபுரியத் தொடங்கினான். இறைவனின் அழைப்பை யார்தான் தடுக்க முடியும்? புனித இராயப்பர், அருளப்பரை நம் மீட்பர் தமது அப்போஸ்தல பணிக்கு அழைத்தபோது மனைவி மக்கள் மறுத்தார்களா?

## ஞானொடுக்கங்களில் புதுமுறை

இனிமேல் வரும் ஞானொடுக்கங்களில் முன்னிலும் கூடிய முறையில் வேதாகம வாசினை, சல்லாபங்கள் இடம்பெறுவதை விரும்பி, ஞானொடுக்கங்கள் போதிப்பதற்கு உலகப் பிரசித்தி பெற்ற "றிடெம்ப்ரறிஸ்ற்" சபைக் குருமார் இதன் சித்தியைப் பரீட்சிக்க அயர்லாந்தில் புதுமுறை ஞானொடுக்கங்கள் போதித்து வருகின்றனர். இதுகாலவரையும் நடந்துவந்த ஞானொடுக்கங்களில் விசேஷமாய் செபமாலை ஓதுதல், சிலுவைப்பாதை செபித்தல், பிரசங்கம் செய்தல் பிரதானமாய் நடந்துவந்துள்ளன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க 5ஆம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1970ஆம் ஆண்டு கார்த்திகை மீ 14ஆம்உ சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக் பிறஸ்" யாழ்ப்பாணம். தொலைபேசி: 300; தாபிதம்: 1876.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org